# மாதிரி வினாத்தாள்

## (இரண்டாம் நிலைக் காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிக்கான பொதுத்தேர்வு)

## இயற்பியல்

01 குவி ஆடியில் (convex mirror) தோன்றும் பிம்பத்தின் தன்மை ?

A) நேரான மாயபிம்பம் B) நேரான மெய்பிம்பம்

C) தலைகீழான மாயபிம்பம் D) மாயபிம்பம் மற்றும் மெய்பிம்பம்

02. I. ஒலி வெற்றிடத்தின் வழியாக பயணிக்க முடியும்

II. மனித காதில் கேட்கக்கூடிய அதிர்வெண்களுக்கான ஒலி வரம்பு 20 Hz முதல் 20,000 Hz வரை இருக்கும்.

A) I மட்டுமே சரியானது B) II மட்டுமே சரியானது

C) I & II இரண்டும் சரி D) I & II இரண்டும் தவறானவை

03 சந்திரயான் – I இந்தியாவால் ஏவப்பட்ட செயற்கைக்கோள்

A) சந்திரனைப் பற்றி அறிந்துகொள்ள B) செவ்வாய் கிரகத்தை பற்றி அறிந்துகொள்ள

C) வானிலையை கணிக்க D) தொலைத்தொடர்பு நோக்கங்களுக்காக

## வேதியியல்

04. ரொட்டிச் சோடாவின் வேதியியல் பெயர் என்ன ?

A) சோடியம் பை கார்பனேட் B) சோடியம் கார்பனேட்

C) சோடியம் பால்மிடேட் D) சோடியம் குளோரைடு

05. பின்வரும் கூற்றுகளில் சரியானவை எது.

(i) இறந்த விலங்குகள் மற்றும் புதைபடிவ மரங்கள் வயதை தீர்மானிக்க "கார்பன் 14" என்ற கதிரியக்க ஐசோடோப்பு பயன்படுத்தப்படுகிறது .

(ii) புற்று நோயை குணப்படுத்த "கோபால்ட் 60" என்ற கதிரியக்க ஐசோடோப்பு பயன்படுத்தப்படுகிறது.

A) (i ) மட்டும் சரி B) (ii) மட்டும் சரி

C) (i) மற்றும் (ii) சரி D) மேற்கண்ட எதுவுமில்லை

06. தவறான இணையைத் தேர்ந்தெடு.

A) நைட்ரிக் அமிலம் – உரம் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது

B) கார்பானிக் அமிலம் – வாயு அடைக்கப்பட்ட பானங்களில் பயன்படுத்தப்படுகிறது

C) கந்தக அமிலம் – வாகன மின்கலன்களில் பயன்படுத்தப்படுகிறது

D) ஆக்ஸாலிக் அமிலம் – கழிவறைகளை தூய்மைப்படுத்தும் பொருளாக பயன்படுத்தப்படுகிறது

## உயிரியல்

07. மனிதனின் தலைப்பகுதியில் காணப்படும் நாளமில்லாச் சுரப்பி எது ?

A) தைமஸ் B) பிட்யூட்டரி

C) அட்ரீனல் D) தைராய்டு

08. எது "செல் பவர்ஹவுஸ்" என்று அழைக்கப்படுகிறது?

A) நியூக்ளியஸ் B) மைட்டோகாண்ட்ரியா

C) செல் சவ்வு D) டிஎன்ஏ / ஆர்என்ஏ

09. BCG என்னும் தடுப்பூசி எந்த நோய் வராமல் இருக்க குழந்தைகளுக்கு போடப்படுகிறது.

A) போலியோ B) மஞ்சள் காமாலை

C) காச நோய் D) டைப்பாய்டு

10. பொருத்துக :

கீழ்கண்ட வைட்டமின் குறைபாட்டினால் ஏற்படும் நோய்கள் யாவை ?

(i) வைட்டமின் A – (a) ரிக்கட்ஸ்

(ii) வைட்டமின் B – (b) மலட்டுத்தன்மை

(iii) வைட்டமின் E – (c) மாலைக்கண் நோய்

(iv) வைட்டமின் D – (d) பெரி பெரி

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| A | c | d | b | a |
| B | a | b | c | d |
| C | d | a | b | c |
| D | c | d | a | b |

## வரலாறு

11. கங்கைகொண்டான் என்று தன்னை அறிவித்தவர் யார்?
    A) முதலாம் ராஜராஜன் சோழன்
    B) முதலாம் ராஜேந்திர சோழன்
    C) குலோத்துங்க சோழன்
    D) விஜயஜேந்திர சோழன்

12. சார்மினார் அமைந்துள்ளது இடம் ?
    A) ஹைதராபாத்
    B) டெல்லி
    C) ஆக்ரா
    D) ஜெய்ப்பூர்

13. I. ஆழ்வார்கள் சைவ மகான்கள்
    II. ஆண்டாள் மட்டுமே பெண் ஆழ்வார்
    மேற்கூறிய கூற்றுகளில் எது உண்மை?
    A) (i ) மட்டும் சரி
    B) (ii) மட்டும் சரி
    C) (i) மற்றும் (ii) சரி
    D) மேற்கண்ட எதுவுமில்லை

14. தென் இந்தியாவில் உப்பு சத்தியாகிரகம் இராஜகோபாலச்சாரியரால் எங்கு தொடங்கப்பட்டது ?
    A) வேதாரண்யம்
    B) திருச்சி
    C) மதுரை
    D) கன்னியாகுமரி

15. 'அர்த்தசாத்திரத்தை' எழுதியவர் யார்?
    A) சாணக்யா
    B) சந்திர குப்தா
    C) அசோகா
    D) காளிதாசன்

16. முதலாம் பானிப்பட் போரில் வெற்றி பெற்ற மன்னன் யார்?
    A) இப்ராஹிம் லோடி
    B) பாபர்
    C) அக்பர்
    D) ஹிமாயூன்

17. தூத்துக்குடியில் இருந்து எந்த நாட்டிற்கு வ.உ.சி சுதேசி கப்பல் நிறுவனம் கப்பல் போக்குவரத்தை இயக்கியது.
    A) மொரீசியஸ்
    B) சிங்கப்பூர்
    C) இலங்கை
    D) மலேசியா

18. பொருத்துக :

| | | |
|---|---|---|
| i. கீழடி | – | a. திண்டுக்கல் |
| ii. பொருந்தல் | – | b . வேலூர் |
| iii. பையன்பள்ளி | – | c. ஈரோடு |
| iv. கொடுமணல் | – | d. சிவகங்கை |

| | i. | ii. | iii. | iv. |
|---|---|---|---|---|
| A | d | a | b | c |
| B | a | c | d | b |
| C | c | b | a | d |
| D | d | b | c | a |

19. 'சதி' ஒழிப்புக்காக உழைத்தவர் ?
    A) ராஜா ராம் மோகன் ராய்
    B) மகாத்மா காந்தி
    C) கோபால கிருஷ்ண கோக்லே
    D) சுவாமி விவேகானந்தர்

## <u>புவியியல்</u>

20. சுனாமி ஏற்படுவதன் காரணம் ?
    A) புயல்
    B) சூறாவளி
    C) கடலுக்கு அடியில் ஏற்படும் நிலநடுக்கம்
    D) பலத்த காற்று

21. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| i. | நீர் மின் நிலையம் | a. | எண்ணூர் |
| ii. | அணு மின் நிலையம் | b. | பாபநாசம் |
| iii. | அனல் மின் நிலையம் | c. | கூடங்குளம் |
| iv. | காற்றாலைகள் | d. | ஆரல்வாய் மொழி |

| | **i.** | **ii.** | **iii.** | **iv.** |
|---|---|---|---|---|
| A | c | d | a | b |
| B | a | c | b | d |
| C | b | c | a | d |
| D | d | c | a | b |

22. இந்தியாவில் தங்கம் அதிகம் உற்பத்தி செய்யும் மாநிலம் எது?
    A) ஜார்கண்ட்
    B) பீகார்
    C) கர்நாடகா
    D) தமிழ்நாடு

23. தமிழ்நாட்டில் வெட்டி எடுக்கப்படும் நிலக்கரி ______ வகையைச் சார்ந்தது ?

A) கிராபைட் B) ஆன்த்ரசைட்

C) லிக்னைட் D) பிட்டுமினஸ்

24. பெட்ரோலியம் இந்தியாவில் எங்கு கிடைக்கிறது ?

A) பாம்பே ஹை மும்பை B) அசாமில் டிக்பாய்

C) கிருஷ்ணா & கோதாவரியின் டெல்டாக்கள் D) மேலே உள்ள அனைத்தும்

25. பொருத்துக

| | | |
|---|---|---|
| i. | கிண்டி தேசிய பூங்கா | a. கோயம்புத்தூர் |
| ii. | மன்னார் வளைகுடா கடல் பூங்கா | b. சென்னை |
| iii. | முக்குருத்தி தேசிய பூங்கா | c. ராமநாதபுரம் |
| iv. | இந்திரா காந்தி தேசிய பூங்கா | d. நீலகிரி |

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| A | b | c | a | d |
| B | c | b | a | d |
| C | c | b | d | a |
| **D** | **b** | **c** | **d** | **a** |

26. புகழ்பெற்ற மலைவாசஸ்தலமான டார்ஜிலிங் எந்த மாநிலத்தில் உள்ளது

A) உத்தரப்பிரதேசம் B) உத்தர் காண்ட்

C) மேற்கு வங்காளம் D) ஹிமாச்சல பிரதேசம்

27. கீழ்கண்ட கூற்றுகளில் சரியானது எது ?

(i) தமிழகத்தின் மாநில மரம் பனை மரமாகும்.

(ii) தமிழகத்தின் மாநில மலர் தாமரை மலர்.

A) (i) சரி B) (ii) மட்டும் சரி

C) (i) மற்றும் (ii) சரி D) மேற்கண்ட எதுவுமில்லை

28. முண்டந்துறை வனவிலங்கு சரணாலயம் எந்த மாவட்டத்தில் உள்ளது ?

A) கன்னியாகுமரி B) திருநெல்வேலி

C) மதுரை D) விருதுநகர்

## இந்திய அரசியல் மற்றும் பொருளாதாரம்

29. I. சட்டப் மேலவை ஒரு நிரந்தர சபை
II. தமிழ்நாட்டில் சட்ட மேலவை உள்ளது
A) (i) மட்டும் சரி
B) (ii) மட்டும் சரி
C) (A) மற்றும் (B) சரி
D) (A) மற்றும் (B) தவறு

30. இந்தியாவில் ஒரு மாநிலத்தின் ஆளுநரை நியமிப்பவர் யார் ?
A) பிரதமர்
B) ஜனாதிபதி
C) உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி
D) மாநில சட்டமன்றம்

31. தமிழ்நாட்டில் எத்தனை பாராளுமன்ற தொகுதிகள் உள்ளன ?
A) 39
B) 35
C) 30
D) 40

32. மாநிலங்களை அவற்றின் தலைநகரங்களுடன் பொருத்தவும்

| | | | |
|---|---|---|---|
| i. | ஆந்திரப் பிரதேசம் | a. | ராய்பூர் |
| ii. | தெலுங்கானா | b. | ராஞ்சி |
| iii. | ஜார்கண்ட் | c. | அமராவதி |
| iv. | சத்தீஸ்கர் | d. | ஹைதராபாத் |

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| **A** | **c** | **d** | **b** | **a** |
| B | d | c | b | a |
| C | d | c | a | b |
| D | d | a | c | b |

33. கூட்டுறவுத் துறையின் உதாரணம் எது ?
A) ரிலையன்ஸ்
B) BHEL
C) மாருதி உத்யோத்
D) அமுல்

34. தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளில் விவசாயிகள் எண்ணிக்கை
A) அதிகரித்துள்ளது
B) குறைந்துள்ளது
C) அப்படியே உள்ளது
D) எதையும் உறுதியாகச் சொல்ல முடியாது

35. பணவீக்கம் என்பது

A) விலைகள் உயரும், பணத்தின் மதிப்பு குறையும்

B) விலை குறைகிறது, பணத்தின் மதிப்பு குறையும்

C) விலை குறைகிறது, பணத்தின் மதிப்பு உயரும்

D) மேற்கண்ட எதுவுமில்லை

36. பணமதிப்பிழப்பு இந்திய அரசால் அறிவிக்கப்பட்டது எப்போது ?

A) 2016

B) 2018

C) 2017

D) 2010

37. பின்வருவனவற்றில் இந்தியாவில் மிகவும் மாசுபட்ட நகரம் எது?

A) டெல்லி

B) மும்பை

C) கொல்கத்தா

D) சென்னை

# பொது அறிவு மற்றும் நடப்பு நிகழ்வுகள்

38. சைபர் குற்றங்களை தடுக்க அறிமுகம் செய்யப்பட்ட அவசர உதவி எண் ?

A) 1098 B) 1091

C) 108 D) 1930

39. மிதாலி ராஜ் யார்?

A) கிரிக்கெட் வீரர் B) நடிகர்

C) அரசியல்வாதி D) ஹாக்கி வீரர்

40. தமிழ்நாட்டில் யாருடைய பிறந்த நாள் சமூக நீதி நாளாக கொண்டாடப்படுகிறது ?

A) அயோத்திதாசர் B) காமராஜர்

C) ஈ.வே .ரா பெரியார் D) அறிஞர் அண்ணா

41. "வந்தே மாதரம்" என்ற தேசிய பாடலை எழுதியவர் யார் ?

A) ரவீந்திரநாத் தாகூர் B) பங்கிம் சந்திரா சாட்டர்ஜி

C) பாரதி D) சரோஜினி நாயுடு

42. கோவிட் – 19 நோய்க்கு இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட தடுப்பூசி எது ?

A) ஸ்புட்னிக் (V) B) கோவாக்ஸின்

C) அஸ்ட்ரா ஜெனிகா D) சினோ வேக்

43. சத்திய சோதனை என்னும் சுயசரிதை நூலை எழுதியர்வர் யார் ?

A) மகாத்மா காந்தி B) ரவீந்திரநாத் தாகூர்

C) ஜவர்லால் நேரு D) C. ராஜகோபாலாச்சாரி

44. ஒலிம்பிக் வரலாற்றில் தடகளத்தில் இந்தியாவின் முதல் தங்க பதக்கம் பெற்றவர் யார் ?

A) P. T உஷா B) மில்கா சிங்

C) நீரஜ் சோப்ரா D) அஞ்சு பாபி ஜார்ஜ்

45. பின்வருவனவற்றில் எது UPI ஆப் அல்ல?

A) G–Pay B) BHIM

C) Pay–TM D) Zoom

## MODEL QUESTION ANSWER KEYS

| Q.NO. | Ans | Q.NO. | Ans | Q.NO. | Ans | Q.NO. | Ans |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 12 | A | 23 | C | 34 | B |
| 2 | B | 13 | B | 24 | D | 35 | A |
| 3 | A | 14 | B | 25 | D | 36 | A |
| 4 | A | 15 | A | 26 | C | 37 | A |
| 5 | C | 16 | B | 27 | A | 38 | D |
| 6 | A | 17 | C | 28 | B | 39 | A |
| 7 | B | 18 | A | 29 | A | 40 | C |
| 8 | B | 19 | A | 30 | B | 41 | B |
| 9 | C | 20 | C | 31 | A | 42 | B |
| 10 | A | 21 | C | 32 | A | 43 | A |
| 11 | B | 22 | C | 33 | D | 44 | C |
| | | | | | | 45 | D |